**ஊடக அறிக்கை**

**கடந்த தசாப்தத்தில் இலங்கையின் கல்வி மற்றும் சுகாதாரபராமரிப்பு துறைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி சம்மந்தமான விடயங்களை சிறப்புறக் கூறுகிறது 'லெகாற்றம்' (Legatum) செழுமைச் சுட்டெண்.**

இலண்டனைத் தளமாக கொண்டியங்கும் சிந்தனை – குழாம் 'லெகாற்றம்' நிறுவனமானது தனது 14 வது செழுமைச் சுட்டென் அறிக்கையை 17/11/2020ல் வெளியிட்டுள்ளது. இவ்வாண்டிற்கான சுட்டெண்ணில், பிரதானமாக குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஒன்றாக, இலங்கையில் கடந்த தசாப்தத்தில் கல்வி மற்றும் சுகாதாரபராமரிப்பு என்பவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இச் சுட்டெணணின் பிரகாரம் இலங்கையினுள் செழுமையினை அதிகரிப்பாதற்கான திறவு கோலாக இந்த முன்னேற்றங்கள் காணப்படுகிறது..

லெகாற்றம் நிறுவனத்தின் தலைவர் அலன் மெக்கார்மிக் அவர்களின் வரவேற்பு உரையுடன் இவ் நிகழ்வு ஆரம்பிக்கப்படது.

வருகைதந்திருந்தோர்கள் மத்தியில் உரையாற்றிய லெகாற்றம் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி த பரனெஸ் ஸ்ரெளட் குறிப்பிடுகையில், லெகாற்றம் சுட்டெண்ணிற்கிணங்க கடந்த தசாப்த்தில் நாடுகளில் ஏற்பட்ட செழுமை அதிகரிப்பினை நோக்குகின்ற போது என்றுமில்லாதவாறு உலகளாவிய ரீதியில் 147 நாடுகளின் செழிப்பினை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு சென்றுள்ளது..

இவ் வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றிய பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன அவர்கள், 2009 ல் முடிவுற்ற பயங்கரவாத யுத்தம், அதனை தொடர்ந்த சமாதான முன்னெடுப்புக்கள் கடந்த தசாப்தங்களுக்குள் ஒரு நிலையான முன்னேற்றத்திற்கு இலங்கையை இட்டுச் சென்றுள்ளது என்று கூறினார். கடந்த ஏழு தசாப்தத்தில் நாட்டில் பின்பற்றப்பட்ட நாடளாவிய இலவச கல்வி மற்றும் சுகாதாரபராமரிப்புக் கொள்கைகள் இச் செழுமையை கட்டியெழுப்புவதற்கான தூண்களாக அமைந்தன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகெங்கிலும் செழிப்பை அளவிட லெகாற்றம் சுட்டெண்ணானது எவ்வாறு பயன்படுகிறது என்பதை லெகாற்றம் நிறுவனத்தின் கொள்கை இயக்குநர் கலாநிதி ஸ்டீபன் பிரையன் வருகைதந்திருந்தோர்களுக்கு விளக்கினார். இந்நிகழ்ச்சியில் ஆபிரிக்காவிலுள்ள மோ இப்ராகிம் அறக்கட்டளையின் நிறுவனரும், உயிரியலாளரும் எழுத்தாளருமான கலாநிதி மோ இப்ராகிம், மற் ரிட்லி மற்றும் பிரித்தானியாவிற்கான ஜோர்ஜியாவின் தூதுவர் சோ.ஃபி கற்சறாவா ஆகியோரும் உரையாற்றினர்.

'லெகற்றம்' செழுமைச் சுட்டெண், ஒரு உலகளாவிய சுட்டெண்ணாக இருப்பதுடன் உலகிலுள்ள 167 நாடுகளில் 65 கொள்கைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏற்பட்டுள்ள செயற்திறன்களை பகுப்பாய்வு செய்வதோடு, ஏறத்தாழ 300 நாடு அளவிலான குறிகாட்டிகளால் அளவிடப்படுகின்றது. அத்துடன் பொருளாதார, சமூக நலநோன்பு மற்றும் நிறுவன ரீதியிலான குறிகாட்டிகளினை அடிப்படையாக கொண்டு தேசிய செழுமையை அளவிடுவதற்கான ஒரே சுட்டெண்ணாக இது காணப்படுகின்றது.

இலங்கை உயர்ஸ்தானிகராலயம்
இலண்டன்

18 நவம்பர் 2020